**கண்காணிப்புப் பொறியாளர், பொபது.,**

**கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்ட அலுவலகம், திருவண்ணாமலை-4.**

**அவர்களின் செயல்முறை ஆணை : பொறி.GK.செல்வக்குமார், M.Tech.,**
**கண்காணிப்புப் பொறியாளர், பொபது.,**

**செயற்முறை ஆணை எண்.1285 / 2025 / நிஉ - 2 / நாள்.16.10.2025.**

பொருள்: பணியமைப்பு – பொ.ப.து - தநா.அ.ப.தொகுதி திரு. ம. வினோத்குமார், இளநிலை உதவியாளர் 2022-2023 ஆம் ஆண்டிற்கான கீழ்நிலை பதவியிலிருந்து பதவி மாற்றம் மூலம் (By Tranfer) இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்றது – 07.08.2024 மு.ப. பணியில் சேர்ந்தது - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக

பார்வை:
1) அரசாணை (நிலை) எண். 2151 / பொபது / நாள். 27.12.1988
2) முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர், (பொது), பொபது., சென்னை – 5 அவர்களின் செ.மு.ஆ.எண். எஸ் 2 (3) / 008122 / 2024 / நாள். 25.07.2024
3) தலைமைப் பொறியாளர், பொபது., சென்னை மண்டலம், சென்னை-5 அவர்களின் செ.மு.ஆ.எண். நி-2(1 ) / 004495 / 2024 / நாள். 02.08.2024.
4) கண்காணிப்புப் பொறியாளர், பொபது., கட்டட (கட்டுமாணம் மற்றும் பராமரிப்பு) வட்டம், திருவண்ணாமலை அவர்களின் செ.ம.ஆ.எண். 1238 / நிஉ 2 / 2024 / நாள்.02.08.2024.

*******

ஆணை,

2022 - 2023 ஆம் ஆண்டிற்கான கீழ்நிலை பதவியிலிருந்து பதவி மாற்றம் மூலம் (By Tranfer) இளநிலை உதவியாளராக பதவி உயர்வு தேர்வு செய்யப்பட்டு பார்வை 2 ல் காணும் செயல் முறை ஆணையின்படி திரு. ம. வினோத்குமார், இளநிலை உதவியாளர் 07.08.2024 முற்பகல் முதல் இவ்வட்ட அலுவலகத்தில் பணியேற்று பணிபுரிந்து வருகிறார். அத்துடன் இவரது பணிப்பதிவேட்டில் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேரந்த நாளான 07.08.2024 மு.ப முதல் இவர் மீது எவ்வித குற்ற குறிப்பாணைகளோ, தண்டணைகளோ மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளோ ஏதுமில்லை என்பதால், எனவே தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு 14.2016) ன் பிரிவு 28 ன் படி இவரின் பணி இளநிலை உதவியாளர் பதவியில் 07.08.2024 மு.ப முதல் வரன்முறை செய்து இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக இவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் துவக்கப்படுகிறது.

இவர் இளநிலை உதவியாளர் பதவியில் தமது மூன்றாண்டு கால தொடர் பணியில் தமது இரண்டாண்டு கால பணியினை திருப்பதிகரமாக நிறைவு செய்தல் வேண்டும். மேலும், இத்தகுதிகாண் பருவ காலத்தில் இவர் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்பெறும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியில் கலந்துகொண்டு பயிற்சித்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து, சார்பில்,
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்,
திருவண்ணாமலை - 4.

பெறுநர்,
திரு. ம. வினோத்குமார், இளநிலை உதவியாளர்,
கட்டட (க& ப) வட்டம், திருவண்ணாமலை - 4.

நகல் : பணிப்பதிவேட்டிற்கு